Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

நகர் ஊரமைப்புத் துறை

துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம்

அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர்: திரு. கி.சண்முகம், எம்.இ.,எம்.பி.ஏ.,

ந.க.எண்.951/2022/கிமா **நாள்: 14.06.2022**

ஐயா,

பொருள் : **மனைப்பிரிவு** - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கிருஷ்ணகிரி மாவட்டம் - தேன்கனிக்கோட்டை வட்டம் - தளி ஊராட்சி ஒன்றியம் - அரசகுப்பம் ஊராட்சி (ம) கிராமம் - சர்வே எண்கள்.169/1A, 169/1C, 169/2A, 169/2C, 169/3C, 169/3D மற்றும் 169/3E -இல் 0.96.95 ஹெக்டேர் (அ) 9695.00ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி கோரியது - தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர், Mr. Mohammed Sagheerulla S/o. Late. Aleemuddin, தேன்கனிக்கோட்டை அவர்களின் விண்ணப்பம் நாள்.12.04.2022.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
3. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.06.2004.
4. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017.
5. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
6. அரசானை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
7. அரசானை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள்.09.12.2020.
8. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686.2017/LA1, நாள்.08.09.2017.
9. அரசு கடிதம் எண்.19113/நவ4(3).2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.08.2017.
10. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்.22.04.2022 (சாலை அமைப்பு வரைபடம் வழங்கப்பட்டது.)
11. இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்.09.05.2022 (நன்னிலை வரி, செலுத்தக்கோரியது.)
12. மனுதாரர், Mr. Mohammed Sagheerulla S/o. Late. Aleemuddin, தேன்கனிக்கோட்டை அவர்கள் நன்னிலைவரி கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள்.24.05.2022.

M. Sagheerulla

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், அரசகுப்பம் ஊராட்சி (ம) கிராமம், சர்வே எண்கள்.169/1A, 169/1C, 169/2A, 169/2C, 169/3C, 169/3D மற்றும் 169/3E –இல் 0.96.95 ஹெக்டேர் (அ) 9695.00ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி கோரி, பார்வை (1)–ல் காணும் கடிதத்துடன் பெறப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, பார்வை (10)–ல் சுட்டிய இவ்வலுவலகக் கடிதம் நாள்.22.04.2022 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி, தானப்பத்திர **எண்.4013/2022**, நாள். 26.04.2022 –ல் சாலைகள், உள்ளாட்சி பொது ஒதுக்கீடு, மற்றும் பூங்கா ஆகியவற்றை ஊராட்சிமன்ற தலைவர், அரசகுப்பம் ஊராட்சி, கிருஷ்ணகிரி அவர்களுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், 10% பொது ஒதுக்கீடு 770.00 ச.மீ–க்கு நிகரான வழிகாட்டு மதிப்பு ரூ.29,000/–ஐ உரிய அரசு கணக்கில் மனுதாரர் செலுத்தியமைக்கான விவரம் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

மனைப்பிரிவின் பரப்பு	0.96.95 ஹெக்டேர் (அ) 9695.00 ச.மீ
கோரிய மனைகள்	55 மனைகள்
ஒதுக்கிய மனைகள்	52 மனைகள்
உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை	
1) மனைப்பிரிவின் சாலை பரப்பு	2117.04 ச.மீ
2) தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகம்	47.40 ச.மீ (0.63 %)
2) அரசகுப்பம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொது உபயோகம்	49.90 ச.மீ (0.66%)

மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./ந.ஊ.து.இ(கி.மா)எண்.55/2022** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

..3

2) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

4) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் அசல் பத்திர நகல் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை:</u>

1. (a) பார்வை (7)-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை (5)-ல் காணும் TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays Tar Roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது, ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2021-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை (9) மற்றும் (8)-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

A. vel. [signature]

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the TamilNadu Real Estate (Regulation & Development) Act 2016.The promotor has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be,in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை (4)-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லாப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாக கீழ்காணும் அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

Head of Account

"0217 Urban Development – 60 Other Urban
Development Schemes – 800 Other Receipts–AS
Receipts under Land use conversion Charges–27
Non – Taxation fees 09 collections
D.P.CodeNo.0217 –60– 800–AS–22709

6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல. உத்தேச இடத்தின் மீது வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இவ்வொப்புதல் நீதிமன்ற தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.

7. பார்வை (3) மற்றும் (5)-ல் காணும் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலைவரி ரூ.15,600/-ம், கொடிநாள் நிதி ரூ.3,500/-ம், காட்சிபலகை கட்டணம் ரூ.11,500/-ம் மற்றும் OSR கட்டணம் ரூ.29,000/-ம் மனுதாரர் செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

...5

A. md. Jayheerak

365

8. The Order is passed subject to the outcome of the writ petition WP (MD) No.8948 of 2019.

9. மனைப்பிரிவின் ஊடே செல்லும் LT Line மின்கம்பி பாதையினை சாலையின் போக்கிற்கேற்ப மாற்றியமைத்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

14/6/22

துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர்.

14/6/22

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(2 தொகுப்பு மற்றும் அசல் தானபத்திரம்)

பெறுநர்:
ஊராட்சிமன்ற தலைவர்,
அரசகுப்பம் ஊராட்சி மன்ற அலுவலகம்,
அரசகுப்பம் ஊராட்சி,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

நகல்:

1) Mr. Mohammed Sagheerulla
S/o. Late. Aleemuddin,
1st Floor, H.B.N. Plaza,
Opp. To New Bus stand,
Yarab Dargah Road,
Denkanikottai – 635 107
— உத்தரவுக் கடிதம் மட்டும்

2) The Chairman
Tamilnadu Real Estate
Regulatory Authority,
No.1A, 1st Floor, CMDA Tower – 2,
Egmore, Chennai – 600 008.
— (வரைபடம்–1 (ம) நிபந்தனைகள் படிவம்–1)

3) உதவி இயக்குநர்,
நில அளவியல் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
— (வரைபடம்–1 (ம) நிபந்தனைகள் படிவம்–1)

4) சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
1, SRO ஆபிஸ் தெரு,
தேன்கனிக்கோட்டை –635107,
கிருஷ்ணகிரி மாவட்டம்
— (வரைபடம்–1 (ம) நிபந்தனைகள் படிவம்–1)

A. md. Jayaramulu

அரசகுப்பம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திருமதி. ரூபா,

ந.க. எண்.ம.பி.ஓ.01/ அரசகுப்பம் நாள்: 18.07.2022

பொருள் : மனைப்பிரிவு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை - தளி ஊராட்சி ஒன்றியம் - அரசகுப்பம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராமம், சர்வே எண்கள் 169/1A, 169/1C, 169/2A, 169/2C, 169/3C, 169/3D & 169/3E-ல் 0.96.95 ஹெக்டேர் (அ) 2.40 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு - சாலைகள், மற்றும் திறவிடப்பகுதிகள் தானமாக பதிவு செய்துள்ளது - இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

பார்வை :

1). தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1997- கட்டிட விதிகள்

2).சார்பதிவாளர், தேன்கனிக்கோட்டை ஆவணப் பதிவு எண்.4013/2022

3). நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.951/2022/கிமா நாள்: 14.06.2022

4). திரு. A. முகமது சகீருல்லா என்பவரின் விண்ணப்பம் நாள்: 14.06.2022

5). அரசகுப்பம் ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்: 05, நாள்: 05.07.2022

ஆணை

தளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அரசகுப்பம் ஊராட்சி மற்றும் கிராம சர்வே எண்கள். 169/1A, 169/1C, 169/2A, 169/2C, 169/3C, 169/3D & 169/3E-ல் 0.96.95 ஹெக்டேர் (அ) 2.40 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் திரு. A. முகமது சகீருல்லா என்பவரால் அமைக்கப்பட்டுள்ள 52 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை(3)-இல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டும் மேற்படி வீட்டு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள், அரசு புறம்போக்கு, திறந்தவெளி ஒதுக்கீடு, அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை மற்றும் Rail Corridors, பொது பாதை மற்றும் நில உச்சவரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம், அதிக உயர்மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்க கூடாது.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர் அவர்களின் நடவடிக்கைகள் மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.து.இ (கிமா) எண்.55/2022, ந.க.எண்.951/2022/கிமா நாள்: 14.06.2022-இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் தவறாமல் பின்பற்றப்பட வேண்டும். (நகல் இணைக்கப்பட்டுள்ளது).
3. தானப்பத்திரத்தில் எழுதி ஒப்படைக்கப்பட்ட நிலையில் எவ்விதமான கட்டுமானங்கள் அமைப்பதோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது.

A. md. Sajbarulla

4. மனைப்பிரிவில் மின்வாரிய விதி முறைகளின்படி நடப்படும் மின் கம்பங்களும் உரிய தொகையினைக் கணக்கிட்டு மனைப்பிரிவு உரிமையாளரே மின் வாரியத்திற்கு செலுத்தி பிற்கால பராமரிப்பிற்கு ஈடு செய்யப்பட வேண்டும். அதன் பின்னரே மனைப்பிரிவின் தெருவிளக்குகள் ஊராட்சியின் பராமரிப்பில் எடுத்துக்கொள்ளப்படும்.
5. இம்மனைப்பிரிவில் கட்டிடங்கள் கட்டும் போது, கூட்டாகவோ அல்லது தனித் தனியாகவோ ஊராட்சியில் உரிய கட்டணம் செலுத்தி, நீல வரைபட அனுமதி பெறப்படல் வேண்டும்.
6. இம்மனைப்பிரிவின் மனைகள் வாங்கும் மனைக்கு உரிமையாளர்கள் மேற்படி அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவதாக எழுத்து மூலமாக பத்திரத்தில் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும். இதனை விற்பனைப் பத்திரத்திலும் சேர்த்து பத்திரம் எழுதப்படல் வேண்டும்.
7. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர் மற்றும் ஊராட்சியின் ஊராட்சி மன்ற தலைவர் ஒப்புதல் பெறப்பட்ட மனைப்பிரிவு என அனுமதி ஆணைகள் விபரங்கள் குறிப்பிட்டு விளம்பரப் பலகை வைக்கப்படல் வேண்டும்.
8. தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் திறவிடப்பகுதிகள் உட்பட அனைத்து இனங்களில் பராமரிப்பு மேற்கொள்ள எதிர் வரும் காலங்களில் பராமரிப்பு மற்றும் இதரக் கட்டணங்கள் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டால், எவ்விதமான மறுப்புகளும் இன்றி பராமரிப்பு மற்றும் இதரக் கட்டணங்களை மனைப்பிரிவு உரிமையாளரால் ஊராட்சிக்கு செலுத்தப்படல் வேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட இம்மனைப்பிரிவில் இத்துறையின் முன் அனுமதியின்றி எவ்விதமான மாறுதலும் மேற்கொள்ளக்கூடாது.
10. கூராய்வு கட்டணம் அரசகுப்பம் பஞ்சாயத்து தலைப்பில் வங்கி கணக்கில் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் 2.40 ஏக்கருக்கு ரூ.3000/- செலுத்தப்பட்டுள்ளது.
11. 3% பதிவுத்துறை வழிகாட்டி மதிப்பு படி அரசகுப்பம் கிராம சர்வே எண்கள். 169/1A, 169/1C, 169/2A, 169/2C, 169/3C, 169/3D & 169/3E-க்கு ரூ.11,000/- அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.
12. இவ்வாணையானது அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஆணைகளின் நெறிமுறைகளுக்கும், விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளுக்கும் உட்பட்டதாகும்.

Roopa
PRESIDENT
ஊராட்சி மன்றத்தலைவர்
அரசகுப்பம் ஊராட்சி
18.07.22

பெறுதல்:

A. முகமது சகீருல்லா
முதல் மாடி, H.B.N. Plaza,
புதிய பேருந்து நிலையம் எதிரில்,
யாரப் தர்கா ரோடு,
தேன்கனிக்கோட்டை - 635 107,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

நகல்:

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), கிருஷ்ணகிரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஓசூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

A. md. Zaheerulla



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate